மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
பயிற்சிப் பரீட்சை- மே - 2019

தரம் 13 (2019) பொருளியல்- 21-T-1 இரண்டு மணித்தியாலம்

அறிவுறுத்தல்கள்

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.
- சரியான அல்லது பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. (விடையளிப்பதற்கு பல்தேர்வு விடைத்தாள் வழங்கப்படும்.)

## பகுதி 1

01) வள அருமை என்பது
1. நாட்டில் ஒரு சில பொருட்களுக்குக் காணப்படும் பற்றாக்குறையாகும்.
2. பொருளாதாரத்தில் காணப்படும் வளங்களைக் கொண்டு மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையொன்றாகும்.
3. பொருளாதார வளர்ச்சி காரணமாக அருந்தல் இல்லாதிருத்தல்.
4. அமெரிக்கா போன்ற நாடுகளில் அருமைப் பிரச்சினை தோன்றாது.
5. பொருளாதாரத்தில் தெரிவு தோன்றுவதற்கு அருமை காரணமாகாது.

02) பின்வருவனவற்றுள் எது சமூக முதலாகும்?
1. பயிர்ச்செய்கை நிலம்
2. தொழிற்சாலைகளும் கட்டடங்களும்
3. தொடர்பாடல் வலையமைப்புக்கள்
4. பொது வீதிகள்
5. அறுவைச் சிகிச்சை நிலையங்கள்

03) பொருளியலில் தெரிவானது
1. வளங்களின் அருமை காரணமாக ஏற்படுகின்றது.
2. வளங்களில் அருமை எல்லையற்ற தேவைகள் காரணமாக ஏற்படுகின்றது.
3. வரையறுக்கப்பட்ட தேவைகள் வரையறுக்கப்பட்ட வளங்கள் காரணமாக ஏற்படுகின்றது.
4. வரையறுக்கப்படாத விருப்பங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட வளங்கள் காரணமாக ஏற்படுகின்றது.
5. எல்லாச் சமூகங்களிலும் வளங்கள் வரையறுக்கப்பட்டிருப்பதால் ஏற்படுகின்றது.

04) உற்பத்தி சாத்திய வளைகோட்டின் மீதுள்ள புள்ளியொன்றில் பொருளாதாரம் உற்பத்தி செய்யுமாயின்
1. பொருளாதாரத்தில் வளங்கள் சில பயன்படுத்தப்படும்.
2. அது ஒரு சந்தைப் பொருளாதாரத்தின் பண்பாகும்.
3. வளங்கள் ஒதுக்கீட்டு வினைத்திறனைக் கொண்டிருக்காது.
4. அது அதிகரிக்கும் அமையச் செலவினைக் கொண்ட வளையியாகும்.
5. அது உற்பத்தித்திறனைக் குறிக்கும்.

05) பின்வருவனவற்றுள் சரியான கூற்றினை இனங்காண்க
1. கேள்வி வளையி இடப்புறமாக நகர்வது கேள்விக் குறுக்கத்தினைக் குறிக்கும்.
2. கேள்வி வளையி வலப்புறம் நகர்வதானது கேள்வி நெகிழ்ச்சி அதிகரிப்பதைக் குறிக்கும்.
3. பொருளின் விலை அதிகரிக்கும் போது கேள்வித்தொகை குறைவது மெய்வருமான அதிகரிப்பின் காரணத்தினால் ஆகும்.
4. இழிவுப் பண்டம் தொடர்பாக எதிர்க்கணிய பதிலீட்டு விளைவானது எதிர்க்கணிய வருமான விளைவிலும் அதிகமாகும்.
5. விலை அதிகரிக்கும் போது பண்டம் நெகிழ்வுள்ளதாயின் உற்பத்தியாளர் வருமானம் அதிகரிக்கின்றது.

06) சந்தையில் பொருள் ஒன்றிற்கான கேள்விச் சமன்பாடு $qd = 600 - 10p$ என்பதில் இருந்து $Qd = 700 - 10p$ என மாற்றமடைந்துள்ளமைக்கு பின்வருவனவற்றுள் எது காரணமாகும்?

1. பதிலீடுகளின் விலைகள் அதிகரித்தமை.
2. பொருளின் விலை இரட்டிப்படைந்தமை.
3. பொருள் தொடர்பான நுகர்வோர் சுவை மாற்றமடைந்தமை.
4. வீட்டுத்துறையினர் வருமானம் குறைந்தமை.
5. பதிலீட்டுப் பண்டத்தின் விலையில் வீழ்ச்சி.

07) குறிப்பிட்டதொரு பண்டத்திற்கான கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்படுகின்றன.
(கேள்வி) : $QD = 200 - 5P$ (நிரம்பல்) $QS = -100 + 5P$ ரூபா 35 விலையில் அரசு மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்யுமாயின் கொள்வனவுச் செலவில் ஏற்பட்டுள்ள மாற்றம் யாது?

1. 1500 ரூபாவால் மாற்றமடையும்
2. 1125 ரூபாவால் குறையும்
3. 1125 ரூபாவால் அதிகரிக்கும்
4. 2625 ரூபாவால் அதிகரிக்கும்
5. 1500 ரூபாவால் குறையும்

08) பின்வருவனவற்றுள் எந்த நிலைமை போட்டிச் சந்தையொன்றின் சமநிலை விலையினை வீழ்ச்சியடையச் செய்யும்

1. நெகிழ்வுள்ள கேள்வி உள்ள நிலையில் உற்பத்தி வளங்களின் விலை அதிகரித்தல்
2. கேள்வி நெகிழ்வற்ற நிலையில் உள்ளீடுகளின் விலை குறைதல்
3. பூரண கேள்வி நெகிழ்வற்ற நிலையில் அலகு வரிவிதித்தல்
4. பூரண நிரம்பல் நெகிழ்வுள்ள நிலையில் அலகு வரி விதித்தல்
5. கேள்வி பூரண நெகிழ்வுள்ள நிலையில் உற்பத்தி மானியம் வழங்கப்படுதல்

09) போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பண்டமொன்றிற்கு அரசு உற்பத்தியாளர் நன்மை கருதி விதிக்கப்படும் கட்டுப்பாட்டு விலையில் ஏற்படும் மிகையினை அரசு கொள்வனவு செய்வதாகக் கருதுக. கட்டுப்பாட்டு விலை காரணமாக உற்பத்தியாளர் மிகை மற்றும் நுகர்வோர் மிகை என்பவற்றில் ஏற்படும் பாதிப்பு யாது?

| உற்பத்தியாளர் மிகை | நுகர்வோர் மிகை |
|---|---|
| 1. குறையும் | குறையும் |
| 2. குறையும் | அதிகரிக்கும் |
| 3. மாறாது | அதிகரிக்கும் |
| 4. அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5. அதிகரிக்கும் | குறையும் |

10) சந்தையில் விற்கப்படும் பண்டமொன்றிற்கான கேள்வி நிரம்பல் சார்புகள் கீழே தரப்படுகின்றன.
கேள்வி : $(Qd) = 6000 - 100P$ , நிரம்பல் $(QS) = -2000 + 100P$ சந்தையில் தலையிடுவதன் மூலம் அரசாங்கம் ரூபா 30 ஐ கட்டுப்பாட்டு விலையாக விதிப்பதாக் கருதுக.
பின்வருவனவற்றுள் எது சரியாகும்

| இறக்குமதிச் செலவு | மொத்த நுகர்வுச் செலவு |
|---|---|
| 1. ரூபா 60,000 | ரூபா 80,000 |
| 2. ரூபா 30,000 | ரூபா 60,000 |
| 3. ரூபா 60,000 | ரூபா 90,000 |
| 4. ரூபா 60,000 | ரூபா 30,000 |
| 5. ரூபா 90,000 | ரூபா 60,000 |

11) ஆடையினை விற்பனை செய்யும் சந்தையொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகள் பின்வரும் வரைபடம் மூலம் காட்டப்படுகின்றன




அரசினால் 200 ஆயிரம் ஆடைகளுக்கு இறக்குமதிக்கான அனுமதிப் பங்கு வழங்கத் தீர்மானித்தால் ஆடைக்கான சந்தை சமநிலை மற்றும் தொகை அளவு யாது?
1. சமநிலை விலை ரூபா 50, தொகையளவு 300
2. சமநிலை விலை ரூபா 40, தொகையளவு 200
3. சமநிலை விலை ரூபா 30, தொகையளவு 200
4. சமநிலை விலை ரூபா 30, தொகையளவு 100
5. சமநிலை விலை ரூபா 30, தொகையளவு 300

12) குறிப்பிட்ட ஓர் பண்டத்தின் விலை அதிகரித்த போதும் அப்பொருளை விற்பனை செய்யும் விற்பனையாளர் வருமானம் வீழ்ச்சியடைந்திருந்தது எனின் அப்பொருள்
1. அலகு விலை நெகிழ்ச்சி கொண்ட பொருளாகும்.
2. கேள்வி பூரண நெகிழ்வுள்ள பொருளாகும்.
3. பூரண கேள்வி நெகிழ்வற்ற பொருளாகும்.
4. கேள்வி விலை நெகிழ்ச்சி கொண்ட பொருளாகும்.
5. நிரம்பல் விலை நெகிழ்ச்சி கொண்ட பொருளாகும்.

13) நிறுவனம் ஒன்று ரூபா 10 விலையில் 10 மில்லியன் கன்டோஸ்களை விற்பனை செய்கின்றது. பொருளின் விலைக் கேள்வி நெகிழ்ச்சி – 2.5 ஆகும் இந் நிறுவனம் பொருளின் விலையினை 20 சதவீதத்தால் குறைக்குமாயின் நிறுவனத்தின் வருமானம் எவ்வளவால் மாற்றமடையும்.
1. 50 மில்லியனால் உயரும்.
2. 20 மில்லியனால் குறையும்.
3. 30 மில்லியனால் அதிகரிக்கும்.
4. 40 மில்லியனால் குறைவடையும்.
5. 20 மில்லியனால் அதிகரிக்கும்.

14) குறிப்பிட்ட ஓர் பண்டத்தின் கேள்விச் சார்பு $QD = 300 - 10P$ ஆகவும், இப்பண்டம் எல்லா விலைகளிலும் 150 அலகு நிலையான நிரம்பலைக் கொண்டதாகவும் கருதுக. அரசாங்கம் இப்பண்டத்தை வழங்கல் செய்யும் இழிவு விலையாக ரூபா 20 ஐ தீர்மானிக்கின்றது. எனின் பின்வரும் சேர்க்கைகளில் சரியானது

| | மேலதிக வழங்கல் | நுகர்வோன் மிகையில் மாற்றம் | உற்பத்தியாளர் மிகையில் மாற்றம் |
|---|---|---|---|
| 1 | 625 அலகு | ரூபா 625 | ரூபா 750 |
| 2 | 50 அலகு | ரூபா 625 | ரூபா 750 |
| 3 | 50 அலகு | ரூபா 750 | ரூபா 625 |
| 4 | 100 அலகு | ரூபா 1125 | ரூபா 2250 |
| 5 | 150 அலகு | ரூபா 750 | ரூபா 1125 |

15) குறுங்காலத்தில் நிறுவனமொன்றின் சராசரி உற்பத்தி (AP) உச்சநிலை எய்தும் போது
1. எல்லை உற்பத்தி குறைந்து செல்லும்.
2. எல்லைச் செலவு வீழ்ச்சியடையும்.
3. சராசரிகச் செலவு அதிகரிக்கும்.
4. மொத்த உற்பத்தியானது உச்ச நிலையினை அடையும்.
5. எல்லைச் செலவு சராசரி மாறும் செலவின் இழிவுப் புள்ளியை வெட்டித் செல்லும்.

16) நிறைபோட்டி நிறுவனமொன்றின் இலாப உச்சப்படுத்தல் வெளியீட்டு மட்டமானது தீர்மானிக்கப்படுவது,
1. அதிகரித்துச் செல்லும் எல்லைச் செலவு (mc) எல்லை வருமானத்திற்கு (MR) சமனாகும் போது
2. எல்லை நலன் (MB) எல்லைச் செலவிற்குச் (MC) சமனாகும் போது
3. நிறுவனத்தின் எல்லை வருவாய் (MR) எல்லைச் செலவிற்குச் (MC) சமனடையும் போது
4. நிறுவனத்தின் மொத்த வருமானம் (TR) மொத்த செலவிற்கு (TC) சமனாகும் போது
5. குறையும் எல்லை விளைவு விதி தீவிரமடையும் போது

17) குறுங்காலத்தில் நிறைபோட்டி நிறுவனமொன்றின் இலாப உச்சப்படுத்தல்வெளியீட்டு மட்டம் 2000 அலகுகளும் சந்தையின் சமநிலை விலை ரூபா 50 எனவும் கருதுக. இவ்வுற்பத்தி மட்டத்தில் நிறுவனம் ரூபா 20,000 பொருளியல் இலாபத்தை உழைக்கின்றது. சமநிலை வெளியீட்டு மட்டத்தில் சராசரி மாறும் செலவு (AVC) ரூபா 30 எனவும் அமைகிறது எனின் உற்பத்தியாளர் மிகை யாது
1. 100, 000 ரூபா
2. 80,000 ரூபா
3. 60, 000ரூபா
4. 40, 000 ரூபா
5. 30,000 ரூபா

18) நிறைபோட்டி நிறுவனமொன்றினது மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவுக் கோடுகளின் தொடுகோட்டுச் சரிவுகள் சமனடையும் வெளியீட்டு மட்டத்தில்
1. நிறுவனம் சாதாரண இலாபத்தினை அடையும்
2. நிறுவனம் இலாபம் ஒன்றினை அடையும்
3. நிறுவனத்தின் நட்டம் இழிவு படுத்தப்படும்
4. நிறுவனத்தின் இலாபம் உச்சப்படுத்தப்படும்
5. நிறுவனம் இலாப நட்டமற்ற நிலையினையடையும்

19) தேசியக் கணக்கீட்டில் உற்பத்தி எல்லையினுள் அடக்கப்படாத உற்பத்திச் செயற்பாடுகள்
1. சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்ப வேலைகள்
2. துணி நெய்தல், உடைகள் தைத்தல், ஆடைகள் பின்னுதல்
3. வீட்டை அழகுபடுத்தலும் சுத்தம் செய்தலும்
4. சந்தையில் விற்பனையாகும் பொருட்களும் சேவைகளும்
5. விவசாய உற்பத்திகளைத் தயாரித்தல், மீன் பதனிடுதல்

20) செலவு வழித் தேசிய கணக்கீட்டின் படி மொத்தச் தேசிய வருமானத்தின் பெறுமதி கணப்பிடப்படுவது
1. இறுதி நுகர்வு + மொத்த உள்நாட்டு மூலதனம் + ஏற்றுமதி + தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம்
2. இறுதி நுகர்வு + மொத்த முதலீடு - தேறிய இறக்குமதி + தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம்
3. தனியார் நுகர்வு + அரச கொள்வனவு + நிலையான மூலதன வாக்கம் + தேறிய வெளிநாட்டு முதன்மை வருவாய்
4. வீட்டுத்துறை நுகர்வு + அரசாங்கக் கொள்வனவு+ தேறிய ஏற்றுமதி +மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் + தேறிய வெளிநாட்டு முதன்மை வருமானம்
5. இறுதி நுகர்வு + மொத்த உள்நாட்டு நிலையான மூலதன வாக்கம் + இருப்பு மாற்றம் தேறிய ஏற்றுமதி + தேறிய நடைமுறை மாற்றல்கள்

21) பொருளாதாரமொன்றின் தேசியக்கணக்கீட்டுடன் தொடர்புடைய தரவுகள் கீழே தரப்படுகின்றன

| வகை | தொகை (மில்லியன் ரூபா) |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 22000 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 9000 |
| அரசாங்கம் கொள்வனவு | 5000 |
| தேறிய ஏற்றுமதிகள் | 2000 |

பொருளாதாரத்தில் தனியார் நுகர்வுச் செலவின் பெறுமதி

1. 5000 மில்லியன்
2. 6000 மில்லியன்
3. 4000 மில்லியன்
4. 8000 மில்லியன்
5. 12000 மில்லியன்

22) அரசதுறையுள்ள மூடிய பொருளாதாரமொன்றில் அரசாங்கச் செலவுகள் 500 மில்லியனால் வீழ்ச்சியடையும் போது வருமானம் 2500 மில்லியனால் வீழ்ச்சியடையுமாயின் எல்லை சேமிப்பு நாட்டத்தின் பெறுமதி யாது?

1. 0.5
2. 0.8
3. 0.2
4. 0.75
5. 0.6

23) அரசதுறையுள்ள மூடியபொருளாதாரமொன்றில் வரிப் பெருகிக் குணகம் - 1.5 ஆகும். சமநிலைத் தேசிய வருமானம் 500 மில்லியனால் அதிகரிக்குமாயின் நுகர்ச்சி மற்றும் சேமிப்பு என்பன எவ்வளவால் மாற்றமடையும்

| | நுகர்ச்சி மட்டம் | சேமிப்பு மட்டம் |
|---|---|---|
| 1 | 200 மில்லியன் அதிகரிக்கும் | 300 மில்லியன் அதிகரிக்கும் |
| 2 | 500 மில்லியன் குறையும் | 400 மில்லியன் அதிகரிக்கும் |
| 3 | 300 மில்லியன் அதிகரிக்கும் | 200 மில்லியன் அதிகரிக்கும் |
| 4 | 300 மில்லியன் குறையும் | 200 மில்லியன் குறையும் |
| 5 | 350 மில்லியன் குறையும் | 250 மில்லியன் குறையும் |

24) எளிமையான பொருளாதாரமொன்றில் மொத்த நுகர்ச்சி வளைகோட்டின் சரிவு வீழ்ச்சியடைவதனால் ஏற்படக் கூடிய பொருளாதார விளைவு

1. பெருக்கியின் பெறுமதி உயர்வதுடன் சமநிலை வருமானம் அதிகரிக்கும்
2. பெருக்கியின் பெறுமதி குறைவதுடன் சமநிலை வருமானம் குறையும்
3. பெருக்கியின் பெறுமதி உயர்வதுடன் சமநிலை வருமானம் குறையும்
4. பெருக்கியின் பெறுமதி குறைவதுடன் சமநிலை வருமானம் அதிகரிக்கும்
5. பெருக்கியின் பெறுமானம் உயர்வதுடன் சமநிலை வருமானம் மாறாது.

25) மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் அரசாங்கம் வரியினை 50 மில்லியனால் குறைத்து அரசாங்க கொள்வனவினை 50 மில்லியனால் அதிகரித்தது எனக் கருதுக . எல்லை நுகர்வு நாட்டம் 0.60 எனின் சமநிலை வருமான மட்டம்

1. 200 மில்லியன் அதிகரிக்கும்
2. 125 மில்லியன் அதிகரிக்கும்
3. 250 மில்லியன் அதிகரிக்கும்
4. 50 மில்லியன் அதிகரிக்கும்
5. 200 மில்லியன் வீழ்ச்சியடையும்

26) விரிந்த பண நிரம்பலில் (m2) பணமாகக் கருதப்படக் கூடியது

1. தாள் குற்றி நாணயங்கள் மற்றும் வைப்புக்கள்
2. காசோலைகள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள்
3. தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்
4. காசோலைகள் மற்றும் நிலையான வைப்புக்கள்
5. தாள் குற்றி நாணயங்களும் கேள்வி வைப்புக்களும்

27) இலங்கையின் பணவியல் தொடர்பான தரவுகள் கீழே காட்டப்படுகின்றன

| விடயம் | தொகை மில்லியன் |
|---|---|
| பணப்பெருக்கிக் குணகம் | 5 |
| M பண நிரம்பல் | 2500 |
| வணிக வங்கியில் உள்ள நாணயம் | 150 |
| வணிக வங்கியின் பெயரில் மத்திய வங்கியில் உள்ள வைப்பு | 200 |

பொது மக்களிடம் உள்ள நாணயத்தின் அளவு யாது?

1. 250 மில்லியன்
2. 100 மில்லியன்
3. 150 மில்லியன்
4. 300 மில்லியன்
5. 500 மில்லியன்

28) பொருளாதாரமொன்றின் மொத்தக் கேள்வி (AD) மொத்த நிரம்பல் (AS) வளையிகள் பின்வரும் வரைபடத்தினால் காட்டப்படுகின்றது.




மொத்த கேள்வி $AD_1$ இலிருந்து $AD_2$ ஆக நகர்வதற்கு ஏதுவாக அமையக் கூடிய காரணி எது?

1. வட்டி வீதம் அதிகரித்தல்
2. அரச செலவு அதிகரித்தல்
3. வரி அதிகரித்தல்
4. தேறிய இறக்குமதி அதிகரித்தல்
5. பண நிரம்பல் குறைவடைதல்

29) பணத்தினை பணமாக வைத்திருப்பது தொடர்பாக பொதுமக்களின் விருப்பம் அதிகரிப்பது

1. பண நிரம்பலில் ஓர் வீழ்ச்சி ஏற்படும் போதாகும்.
2. சந்தை விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும் போதாகும்.
3. தேறிய மொத்த உள்நாட்டு உற்பத்தி குறையும் போதாகும்.
4. பண்டங்களின் விலை மட்டம் வீழ்ச்சியடையும் போதாகும்.
5. நிதிப்பத்திரங்களின் விலை அதிகரிக்கும் போதாகும்.

30) வங்கி முறைமையொன்றில் இயங்கும் வணிக வங்கியொன்று ரூபா 50,000 வைப்புக்களையும் ரூபா 20000 ஒதுக்கீடுகளையும் 30000 ரூபாவைக் கடன்களாகவும் கொண்டுள்ளது. சட்டப்படியான ஒதுக்கீடு 20% எனின் வங்கி முறைமை கொண்டுள்ள புதிய வைப்புக்களின் பெறுமதி

1. ரூபா 100,000
2. ரூபா 50,000
3. ரூபா 10,000
4. ரூபா 20,000
5. ரூபா 80,000

31) மத்திய வங்கி பணச்சந்தையில் மீள் விற்பனையில் ஈடுபடுமாயின்

1. வணிக வங்கிகளின் நிரவப்பற்றாக்குறை அதிகரிக்கும்
2. பணச்சந்தையில் திரவத்தன்மை நிரம்பல் அதிகரிக்கும்
3. பணச்சந்தையில் நிரவத்தன்மை நிரம்பல் குறையும்
4. பொது மக்களது கடனுக்கான கேள்வி குறைவடையும்
5. வணிக வங்கிகளின் மிகை ஒதுக்கீடுகள் குறைவடையும்

32) பொருளாதாரம் ஒன்றில் சந்தைத் தோல்வி ஏற்படுவதற்கு மிகப் பொருத்தமான காரணி,
1. பொது வளங்கள் காணப்படுதல்
2. நேர் வெளிவாரிகள் காணப்படுதல்
3. சந்தையின் மூலம் வினைத்திறனாக வளங்கள் ஒதுக்கப்படுதல்
4. சந்தையின் மூலம் தனியார் நலன் மாத்திரம் கவனத்திற் கொள்ளப்படுதல்
5. பொதுப்பண்டங்கள் சேவைகளை அரசு வழங்கல்

33) அரசாங்கத் தோல்வி ஏற்படுவதற்குக் காரணமாக அமைவது
1. வளங்கள் வினைத்திறனாக ஒதுக்கீடு செய்யப்படாமை
2. பொதுப் பொருட்கள் நோக்கி வளங்களை ஒதுக்கீடு செய்தல்
3. அரசியல் கொள்கைகளில் தூர நோக்குச் சிந்தனை இன்மை
4. நிர்வாகச் செலவுகள் குறைவாகக் காணப்படுதல்
5. வருமானப் பங்கீட்டினை நியாயமான முறையில் செயற்படுத்துதல்

34) வெளிவாரி நேர்விளைவுகளை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கை
1. சுற்றாடல் வரி விதித்தல்
2. அரசினால் தண்டப்பணம் அறவிடல்
3. அனுமதிப்பத்திரம் வழங்குதல்
4. கேள்வியினைத் துண்டுதல் தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளல்
5. மீள் சுழற்சிக்கு உட்படுத்துதல்

35) வரி அறவிடலில் நிலைக்குத்து நியாயத்துவம் என்பது
1. ஒரே பொருளாதார இயலுமை கொண்ட நபர்களை சமமாகக் கருதி ஒரே அளவான வரிச்சுமையை ஏற்படுத்துதல் ஆகும்
2. சமனற்ற பொருளாதார இயலுமை கொண்ட நபர்களை சமனற்றவராகக் கருதி வெவ்வேறு வீத வரியினை அறவிடுதல் ஆகும்.
3. நுகர்வோர் மீது குறிப்பிட்டளவு வரியைச் சுமத்த முடிதல்
4. ஒருவர் மீது விதிக்கப்படும் வரிச்சுமை முழுவதும் இன்னொருவர் மீது சாட்டுதல் செய்ய முடிதலாகும்
5. வரித்தளம் உயர்வடைகையில் எல்லை வரி வீதம் குறைந்து செல்லுதலாகும்

36) சந்தைப் பொருளாதாரங்களில் தீங்கிழைக்கும் பண்டங்கள் கூடுதலாக வெளியீடு செய்யப் படும் ஏனெனில்
1. சமூக நன்மைகள் தனியார் நன்மைகளை விட அதிகமாகவிருக்கும்
2. தனியார் செலவுகளை விட சமூகச் செலவுகள் குறைவானதாகும்
3. தனியார் நன்மைகள் சமூக நன்மைகளை விடக் கூடுதலாகவிருக்கும்
4. வெளிவாரிச் செலவுகள் குறைந்தளவே காணப்படும்
5. இப்பண்டங்கள் வெளிவாரி நன்மைகள் தரும் பண்டங்களாகும்

37) நுகர்வில் போட்டித் தன்மை வாய்ந்தாகவும் நுகர்விலிருந்து விலக்கப்பட முடியாததாகவும் இருப்பது
1. தனியார் பண்டம்
2. மேன்மைப் பண்டங்கள்
3. ஆதன வளங்கள்
4. தூய பொதுப் பண்டம்
5. பொது வளங்கள்

38) அமெரிக்கா மற்றும் பிரேசில் நாடுகள் ஓரலகு வளச்சேர்க்கையைப் பயன்படுத்தி $x, y$ ஆகிய பண்டங்களை உற்பத்தி செய்யும் நிலைமைகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது

| | அமெரிக்கா | பிரேசில் |
|---|---|---|
| $x$ பண்டம் | 25 | 20 |
| $y$ பண்டம் | 15 | 10 |

அட்டவணையிலிருந்து பெறக் கூடிய சரியான முடிவு
1. அமெரிக்கா $x$ பண்டத்திலும் பிரேசில் $y$ பண்டத்திலும் முழு நன்மையைக் கொண்டதாகும்
2. பிரேசில் $y$ பண்டம் தொடர்பாக ஒப்பீட்டு நன்மையைக் கொண்டது
3. பிரேசில் நாடு $x$ பண்ட உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டது
4. அமெரிக்கா $x$ பொருளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும்
5. பிறெசில் $y$ பொருளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும்

39) சென்மதி நிலுவையின் நீண்டகாலப் பற்றாக்குறையொன்று தோன்றும் போது அதனைத் தீர்ப்பதற்கு முன்வைக்கக் கூடிய முன்மொழிவுகளில் ஒன்று?
1. நாணயமாற்று விகிதத்தின் பெறுமதியினை அதிகரித்தல்
2. அத்தியவசியமான இறக்குமதி தவிர ஏனைய இறக்குமதிகளை தைரியப்படுத்துதல்
3. இறக்குமதிக்கான ஒப்பந்தங்களைத் தைரியப்படுத்தல்
4. வெளிநாட்டிலிருந்தான நேர் முதலீடுகளைக் கட்டுப்படுத்துதல்
5. வெளிநாட்டுக்கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

40) இலங்கையின் பணவீக்க வீதத்தை விட வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடும் நாட்டினது பணவீக்க வீதம் உயர்வாக இருப்பின்
1. நாட்டின் பெயரளவு பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் மெய்பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று வீதத்தை விட உயர்வாக இருக்கும்
2. மெய்பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதத்தைக் காட்டிலும் பெயரளவு பயனுறுதி நாணய மாற்று வீதம் உயர்வாக அமையும்
3. பெயரளவு நாணய மாற்று வீதம் உயர் பெறுமதி உடையது
4. பெயரளவுப் பெறுமதி வாய்ந்த நாணய மாற்று வீதத்தை விட மெய்பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் குறைந்த பெறுமதி கொள்ளும்
5. மெய்ப்பயனுறுதி வாய்ந்த நாணய மாற்று வீதம் உயர்வாகவிருக்கும்

41) பல்பக்க சர்வதேச நிதி நிறுவனமான ஆசிய – அபிவிருத்தி வங்கி (ADB) யின் நோக்கம்
1. அங்கத்துவ நாடுகளிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்தல்
2. அங்கத்துவ நாடுகளிடையே வறுமையைக் குறைப்பதும் மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதுமாகும்
3. அங்கத்துவ நாடுகளிடையே முதலீட்டை ஊக்குவித்தல்
4. அங்கத்துவ நாடுகளின் கலாசாரத்தை பகிர்ந்து கொள்ளுதல்
5. அங்கத்துவ நாடுகளில் போர் ஏற்படாது பாதுகாத்தலும் விருத்தி செய்தலும்

42) உற்பத்திக் காரணிகளும், பொருட்கள் சேவைகளும் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாடுகளுக்கிடையில் தடையின்றி அசைவதற்கு வாய்ப்பளிக்கும் பொது வர்த்தகப் பங்குடமைக்கு உதாரணமாக அமைவது?
1. மத்திய அமெரிக்க பொதுச்சந்தை (CACM)
2. ஆபிரிக்க சுதந்திர வர்த்தகவலயம் (AFTZ)
3. தீர்வை வரிச் சங்கம் (CU)
4. சுதந்திர வர்த்தக வலயம் (FTA)
5. பொருளாதார மற்றும் நிதிச் சங்கம் (EU)

43) பொருளாதார வளர்ச்சி ஒன்று ஏற்பட்டுள்ளமையைச் சிறப்பாக விபரிப்பது,
1. உற்பத்தி மட்டம் அதிகரிப்பதும் வருமானங்களின் பங்கீடு நியாயமாக அமைவதுமாகும்.
2. உற்பத்தி சாத்திய வளையிக்குள் உற்பத்தி அமைந்தாலும் உற்பத்தி மட்டம் அதிகிரித்துச் செல்லுதல் வேண்டும்.
3. உற்பத்தி சாத்திய வளையியின் வலதுபுறநகர்வும் மொத்த நீண்டகால நிரம்பல் வளையின் நகர்வும்
4. உற்பத்தி சாத்திய வளைகோட்டின் வலப்புறமான நகர்வும் நீண்டகால மொத்த நிரம்பல் வளைகோட்டின் வலப்புற நகர்வும்
5. பொருளாதாரத்தில் உத்தம உற்பத்தி மட்டத்தின் அதிகரிப்பாகும்.

44) வளர்ச்சிக் செயற்பாட்டில் வெற்றி கண்ட நாடுகளின் பொதுப் பண்புகளில் ஒன்று
1. வளப்பங்கீடானது அரச அதிகாரத்தின் மூலம் நடை பெறுதல்
2. சந்தை சக்திகளினால் பேரினப் பொருளாதார இலக்குகள் எய்தப்படுதல்
3. உயர்வான சேமிப்பு மற்றும் முதலீட்டு மட்டங்களைப் பேணிச் செல்லுதல்
4. தொழிலாளர்களிடையே நட்புறவினை மேம்படுத்துதல்
5. ஊழியப்படையின் உற்பத்தித்திறனை உருவாக்குதல்

45) இலங்கையில் மானிட அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நியதிகள்/கூறுகளைக் கொண்ட தொகுதியை இனங்காண்க
1. பாடசாலைக் கல்வியை பெற்ற ஆண்டுகளின் எண்ணிக்கை, சுகாதாரம்
2. கொள்வனவு சக்தி அடிப்டையிலான தலாவருமானம், கல்வி, சுகாதாரம்
3. சுகாதார வசதிகளின் தரம், பாடசாலைக் கல்வியின் தரம் மற்றும் நலத்துறை
4. சுகாதாரம், வாழ்க்கைத்தரம், அறிவு
5. உயர்வருமானம். உயர்சுகாதாரம், உயர்கல்வி

46) கற்பிதமான ஒரு நாட்டின் வளையியை பின்வரும் வரைபு காட்டுகின்றது.




குறிப்பிட்ட நாட்டில் எத்தகைய நிகழ்வு இடம் பெற்றுள்ளது
1. வறியோர் சார்பாக வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளது
2. வருமானம் ஓரளவு சமத்துவம் செய்யப்பட்டுள்ளது.
3. 2018ம் ஆண்டு வறுமைத் தணிப்புத்திட்டங்கள் குறைக்கப்பட்டுள்ளது
4. பிரதேச ரீதியாக வருமானம் சமத்துவமாக்கப்பட்டுள்ளது
5. நாட்டின் வருமானம் மக்களிடையே சீராகப் பகிரப்பட்டுள்ளது

47) கருதுகோள் ரீதியாக குறித்தவொரு நாட்டின் பொருளாதாரத் தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| வகை | தொகை (மில்லியன்) |
|---|---|
| வேலை தேடுவோர் தொகை | 20 |
| வீட்டுத் தலைவிகள் | 15 |
| முழுநேர மாணவர் | 20 |
| வேலை செய்யக் கூடிய வயதிலான சனத்தொகை | 200 |
| அங்கவீன முற்றோர் | 05 |

மேலேயுள்ள தரவுகளின் படி குறிப்பிட்ட நாட்டின் வேலை வாய்ப்பு வீதத்தையும் ஊழியப்படை பங்கு கொள்ளல் வீதத்தையும் காட்டும் சரியான விடை யாது?

| | வேலை வாய்ப்பு வீதம் | ஊழியப்படை பங்கு கொள்ளல் வீதம் |
|---|---|---|
| 1. | 10% | 70% |
| 2. | 15% | 80% |
| 3. | 87.5% | 80% |
| 4. | 60% | 80% |
| 5. | 25 % | 65% |

48) வருமானப் பரம்பலின் ஏற்றத்தாழ்வு அளவிடப்படுவது,
1. ஐயனை பரவல் விகிதத்தின் மூலமாகும்
2. தலைக்குரிய வருமான மட்டத்தின் மூலமாகும்
3. தலைக்குரிய கொள்வனவு சமமதிப்பு வருமானம் மூலமாகும்
4. மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தினாலாகும்
5. மெய் மொத்தத் தேசிய வருமானத்தின் வளர்ச்சி மூலமாகும்

The National e-learning Portal for the General Education

49) ஆட்கணிப்பு வறுமைச்சுட்டெண் என்பது

1. வறுமையில் வாழும் சனத்தொகையினை மொத்த செல்வந்தர்களின் எண்ணிக்கையின் நூற்று வீதமாகக் கூறுதல் ஆகும்.
2. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சனத்தொகையினை மொத்த சனத்தொகையின் சதவீதமாகக் காட்டுதல் ஆகும்.
3. உணவும் உணவல்லாத பொருட்கள் சேவைகளை நுகரும் பொருட்டு ஏற்படும் செலவினை வறிய சனத்தொகையின் விகிதமாகக் கூறுதலாகும்
4. வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சனத் தொகையினை ஊழியப் படையின் நூற்று வீதமாகக் கூறுதலாகும்
5. குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கும் உயர்வருமானம் பெறும் மக்கள் பிரிவினருக்கும் இடையிலான விகிதத்தினாலாகும்

50) அபிவிருத்தியினை அளவிடுவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மகிழ்ச்சிச் சுட்டெண் பல்வேறு துறைகளை அளவிடப் பயன்படுகின்றது. அத்துறைகளைக் கொண்ட தொகுதி எது?

1. விவசாயம், கைத்தொழில், சேவை மற்றும் அரசியல்
2. சமூக, பொருளாதார மற்றும் சேவைத்துறை
3. சமூக, பொருளாதார, கலாசார அரசியல் மற்றும் சூழல்
4. பொருளாதார, சமூக மானிடத்துறை
5. உற்பத்தி சேவை, தொழில்நுட்ப மற்றும் மானிடத்துறை

The National e-learning Portal for The General Education

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# பயிற்சிப் பரீட்சை- மே - 2019

தரம் 13 (2019) பொருளியல்- 21-T-11 மூன்று மணித்தியாலம்

**அறிவுறுத்தல்கள்**
- உப பகுதி ,அ', உபபகுதி ,, ஆ' ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் இரண்டுவினாக்களையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.

## உப பகுதி "அ"

**இப்பகுதியில் இருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்க.**

(1)

i. உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்ற " இயற்கை வளங்கள்" அனைத்தும் பொருளாதாரமல்லா வளங்களாகும். இக்கூற்றுடன் உடன்படுகின்றீரா? உமது விடையை விளக்குக?

(4 புள்ளி)

ii. திட்டமிடற் பொறிமுறை, விலைபொறி முறைகளைப் பின்பற்றும் பொருளாதார, முறைமைகளின் பண்புகளைப் பட்டியலிடுக?

(4 புள்ளி)

iii. மூலதனம் , சமூக மூலதனம் ஆகியவற்றை வேறுபடுத்துக?

(4 புள்ளி)

iv. எத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுவதன் மூலம் பொருளாதாரமொன்றின் உற்பத்தி வினைத்திறனை அடைய முடியும் என்பதை விளக்குக?

(4 புள்ளி)

v. நிலைக்குத்தச்சில் மோட்டார் உதிரிப் பாகங்களையும், கிடையச்சில் கணனி மென் பொருளையும் உற்பத்தி செய்யும் பொருளாதாரமொன்றில் அதிகரிக்கும் அமையச் செலவுடைய உற்பத்தி சாத்திய எல்லையொன்றை வரைக?

(1 புள்ளி)

அவ் வளைகோட்டில் பின்வருவனவற்றை விளக்குக

I. பொருளாதார பின்னடைவு காரணமாக வேலையின்மை அதிகரித்தல்

(1 புள்ளி)

II. வளங்கள் உச்ச விளைதிறனைப் பெற முடியாத வகையில் பயன்படுத்தல்

(1 புள்ளி)

III. வளங்கள் உச்ச விளைதிறனைப் பெறக் கூடிய வகையில் பயன்படுத்தல்

(1 புள்ளி)

(2)

i. போட்டிச் சந்தையில் விற்பனை செய்யப்படும் பண்டமொன்றின் நிரம்பல் அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் எவை மாறுவதாகக் கொள்ளப்படுகின்றது?

(4 புள்ளி)

ii. சந்தையில் விற்கப்படும் பண்டங்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

- $x$ பண்டத்தின் விலை 5 சதவீதம் அதிகரிக்க அதன் கேள்வித் தொகை 3 சதவீதத்தால் அதிகரித்தது.
- $x$ பொருளின் விலை அதிகரிப்பினால் $y$ பொருளின் கேள்வி அளவு 7.5 சதவீதம் அதிகரித்தது.

அ. $x$ பொருளின் விலை நெகிழ்ச்சி மற்றும் $xy$ பண்டங்களுக்கான குறுக்கு நெகிழ்ச்சியைக் கணிக்குக?

(2 புள்ளி)

ஆ. $x$ மற்றும் $xy$ பண்டங்களை வகைப்படுத்துக?

(2 புள்ளி)

iii. நுகர்வோர் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளி)

The National e-learning Portal for The General Education TM

iv. போட்டிச் சந்தையில் விற்கப்படும் பண்டமொன்றிற்கான கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

$Qd = 500 - 10P \qquad Qs = -300 + 10P$

அ. வரைபுத்தாள் ஒன்றில் கேள்வி நிரம்பல் கோடுகளை வரைந்து சந்தை சமநிலை விலை மற்றும் சமநிலைத்தொகை என்பவற்றைக் கணிக்குக? (4 புள்ளி)

ஆ. அரசாங்கம் 45 ரூபா கட்டுப்பாட்டு விலையில் ஏற்படும் மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்யுமாயின் அரசின் கொள்வனவுச் செலவு யாது? (2 புள்ளி)

இ. அரசு மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்யுமாயின் நுகர்வோர் மிகையின் பெறுமதி யாது? (2 புள்ளி)

(3)

i. சட்ட ரீதியாக அரசினால் விதிக்கப்படுகின்ற விலைக்கட்டுப்பாட்டுக் கொள்கைகளிரண்டையும் விளக்குக. (4 புள்ளி)

ii. குறிப்பிட்ட பண்டம் தொடர்பாக சந்தைக்கேள்வி நிரம்பல் என்பன சமன்பாடுகள் மூலம் தரப்படுகின்றன

$ad = 400 - 15P \ , Qs = 200 + 5P$

அ. சந்தை சமநிலையின் போது நுகர்வோன் செலவினைக் கணிக்குக? (2 புள்ளி)

ஆ. அரசு உற்பத்தியாளர்களுக்கு ரூபா 4 இனை அலகுவரியாக விதிக்குமாயின் நுகர்வோன் மிகை இழப்பு எவ்வளவு? (4 புள்ளி)

iii. கேள்வி நெகிழ்வற்றதும் நிரம்பல் நெகிழ்வுடையதுமான பண்டம் ஒன்றின் மீது அலகுவரி விதிப்பதனால் நுகர்வோர் மிகைவரிச்சுமை மற்றும் உற்பத்தியாளர் மிகைவரிச்சுமை என்பன எவ்வாறு அமைகிறது என்பதை வரிப்பட உதவியுடன் விளக்குக? (5 புள்ளி)

iv. பொருளொன்றின் கேள்வி நீட்டம் என்பதை வரையறுக்கும் போது கையாளப்படுகின்ற எடுகோள்கள் எவை? (5 புள்ளி)

(4)

i. குறுங்கால சராசரி மாறும் செலவு $(Avc)$ மற்றும் குறுங்கால எல்லைச் செலவு $(MC)$ என்பவற்றுக்கிடையிலான தொடர்பு யாது? (5 புள்ளி)

ii. நிறைபோட்டி நிறுவனமொன்றின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பான தரவுகள் வருமாறு

| வகை | தொகை ரூபா |
|---|---|
| மொத்த வருமானம் | 45000 |
| உற்பத்தியாளர் மிகை | 23000 |
| சுராசரிச் செலவு$(ATC)$ | 40 |
| எல்லைச் செலவு $(MC)$ | 45 |

அ. சராசரி மாறும் செலவின் பெறுமதி யாது? (2 புள்ளி)

ஆ. சராசரி நிலையான செலவின் பெறுமதி யாது? (2 புள்ளி)

இ. நிறுவனத்தின் வெளியீட்டு அளவு யாது? (1 புள்ளி)

iii. அளவுத்திட்ட சிக்கனம் என்பதை விளக்குக? நிறுவனம் ஒன்றில் ஏற்படக்கூடிய சிக்கனங்கள் எவை? (5 புள்ளி)

iv. நேரில் செலவு என்றால் என்ன? இச் செலவில் உள்ளடங்கும் விடயங்கள் எவை? (5 புள்ளி)

(5)

i. வர்த்தக சகடவோட்டமொன்றின் பூரித்த நிலைப்புள்ளி தாழ்வு நிலைப்புள்ளி என்பவற்றின் முக்கியமான பண்புகளை விளக்குக? (4 புள்ளி)

ii. தேசியக் கணக்கீட்டில் பல்கணிப்பீட்டுப் பிரச்சினையினை உதாரணம் ஒன்றின் மூலம் விளக்குக? (5 புள்ள)



The National e-learning Portal for The General Education

iii. கற்பிதமான பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதார தரவுகள் கீழே தரப்படுகின்றன.

| வுகை | தொகை மில்லியன் |
|---|---|
| வீட்டுத்துறை நுகர்வு | 1000 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 800 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 400 |
| வீட்டுத்துறைக்கு சேவை வழங்கும் நிறுவனங்களின் சேவை | 200 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 3200 |
| தேறிய வெளிநாட்டு முதனிலை வருமானம் | 750 |
| இரண்டாம் நிலை வருமானப் பெறுகை | 2500 |
| இரண்டாம் நிலை வருமானச் செலுத்தல்கள் | 1300 |

மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றை கணிக்குக

அ. தேறிய பொருட்கள் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதி? (2 புள்ளி)

ஆ. தேசிய சேமிப்பின் பெறுமதி யாது? (1 புள்ளி)

இ. செலவிடக் கூடிய மொத்த தேசிய வருமானம் யாது? (2 புள்ளி)

iv. கருதுகோள் ரீதியான பொருளாதாரம் ஒன்றின் பேரினப் பொருளாதாரம் தொடர்பான தகவல்கள் தரப்படுகின்றன.

தன்னிச்சையான நுகர்வு $(C)$ 400 மில்லியன் ரூபா

1000 மில்லியன் ரூபா வருமானம் அதிகரிக்கும் போது சேமிப்பு 200 மில்லியனால் அதிகரிக்கின்றது. தனியார் முதலீடு 200 மில்லியனாகும்.

அ. இப்பொருளாதாரத்தின் நுகர்வுச் சார்பு, மற்றும் சேமிப்பு சார்புகளைத் தருக? (4 புள்ளி)

ஆ. இப்பொருளாதாரத்தில் 200 மில்லியன் ரூபா அரசாங்கச் செலவு மேற்கொள்ளப் படுமாயின் சமநிலை வருமானம் எவ்வளவால் மாற்றமடையும்? (2 புள்ளி)

## cggFjp “M”

**(6)**

i. பின்வரும் காரணிகள் பணத்திற்கான கேள்வியில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை விளக்குக

அ. மெய் வருமானம் (2 புள்ளி)

ஆ. பொது விலை மட்டம் (2 புள்ளி)

ii. மத்திய வங்கியின் தற்கால நிதிக் கொள்கைச் சட்டகத்தின் பிரதான நோக்காகிய “நாணய இலக்கிடல்” என்பது யாது? (4 புள்ளி)

iii. வங்கிக் கட்டமைப்பில் இயங்கும் வங்கியின் ஐந்தொகையினைப் பின்வரும் ஐந்தொகை காட்டுகின்றது.

| பொறுப்புக்கள் | தொகை மில்லியன் | சொத்துக்கள் | தொகை மில்லியன் |
|---|---|---|---|
| வைப்பு | 7000 | ஒதுக்கம் | 2000 |
| | | பிணைகள் | 1000 |
| | | கடன்கள் | 4000 |
| மொத்தம் | 7000 | மொத்தம் | 7000 |

வங்கிகள் 600 மில்லியன் மிகை ஒதுக்கீடுகளைப் பேணுவதாகவும் நாட்டின் பண நிரம்பல் 7800 மில்லியன் காணப்படுவதாகவும் கருதுக

அ. தேவைப்படும் ஒதுக்கு வீதம் யாது? (2 புள்ளி)

ஆ. வங்கி மிகை ஒதுக்குகளைக் கடனாக வழங்குமாயின் வங்கிக் கட்டமைப்பில் புதிய வைப்புக்களின் பெறுமதி யாது? (2 புள்ளி)

இ. பொதுமக்கள் தம்வசமுள்ள நாணயங்களில் 500 மில்லியன் ரூபாவினை வைப்புச் செய்வார்களாயின் புதிய பண நிரம்பல் மட்டம் எவ்வாறு அமையும்? (2 புள்ளி)

The National e-learning Portal for The General Education

iv. வணிக வங்கிகளின் இருப்பு நிலைக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளவாறு முதல்நிலை ஒதுக்குகளையும் உழைக்கும் சொத்துக்களையும் பெயரிடுக? (4 புள்ளி)

v. கற்பிதமான பொருளாதார மொன்றின் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தி 10000 மில்லியன் ரூபாவிலிருந்து 10500 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது. நாட்டின் மெய்உற்பத்தி 2 சதவீதத்தால் அதிகரித்தது எனின் மற்றவைகள் மாறா நிலையின் பொதுவிலை மட்டம் எவ்வளவால் மாற்றம் அடைந்திருக்கும்?

(2 புள்ளி)

**(7)**

i. மேன்மைப்பண்டம், மேன்மையற்ற பண்டம். பொதுப்பண்டம், மற்றும் பொதுவளம் ஆகியவற்றின் பண்புகளை விபரிக்குக?

(4 புள்ளி)

ii. பொருள் அல்லது சேவை ஒன்றினை உற்பத்தி செய்யும் போது வெளிவாரி நன்மைகள் தோன்றும் நிலையில் விலைப்பொறி முறையினால் வழங்கப்படும் வெளியீட்டளவானது சமூக ரீதியான வெளியீட்டளவிலும் குறைவாக அமைவது ஏன், பொருத்தமான வரைபடத்தைப் பயன்படுத்தி விளக்குக?

(4 புள்ளி)

iii. சந்தைத் தோல்வியினைச் சரி செய்வது தொடர்பாக அரசாங்கம் சந்தையில் ஆற்றும் பணிகளைக் குறிப்பிடுக

(4 புள்ளி)

iv. சட்ட ரீதியான வரித்தாக்கம் மற்றும் பொருளாதார ரீதியான வரித்தாக்கம் என்பவற்றை உதாணம் ஒன்றின் மூலம் விளக்குக

(4 புள்ளி)

v. பொருளாதாரமொன்றின் பாதீடு தொடர்பான தகவல்களை கீழே அட்டவணை காட்டுகின்றது.

| வகை | தொகை மில்லியன் |
|---|---|
| 1. வரி வருமானங்கள் | 1600 |
| 2. பண்டங்கள் பணிகள் மீதான நடப்புச் செலவு | 2200 |
| 3. மூலதனச் செலவுகள் | 1000 |
| 4. வரியல்லா வருமானங்கள் | 500 |
| 5. நடைமுறை மாற்றல்கள் | 800 |
| 6. நடைமுறைக் கணக்கு மீதி | -1200 |
| 7. நன்கொடை | 500 |
| 8. தேறிய கடன் வழங்கல் | 200 |

பின்வருவனவற்றை கணிக்குக.

1) வட்டிச் செலுத்தல்களின் பெறுமதி யாது? (2 புள்ளி)
2) முழு மொத்த மீதியின் பெறுமதி யாது? (2 புள்ளி)

**(8)**

i. ஒப்பீட்டு நன்மை கோட்பாட்டிற்கு அடிப்படையாகவுள்ள எடுகோள்கள் எவை? (4 புள்ளி)

ii. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் களனி ரயர் ஒன்றின் விலை ரூபா 8000 ஆகும். இப்பொருள் 2000 ரூபா இறக்குமதி உள்ளீட்டினைக் கொண்டுள்ளது. அதே 8000 ரூபாவிற்கு ஜப்பானிய இறக்குமதி ரயரும் உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதாகக் கருதுக.

அ. இறக்குமதிப் பொருள் மீது 10 சதவீத இறக்குமதி வரி விதிக்கப்படுமாயின் பெயரளவு பாதுகாப்பு வீதம் யாது? (1 புள்ளி)

ஆ. இறக்குமதி வரியில் மாற்றம் இல்லையாயின் மெய்ப்பயன் உறுதி மிக்க பாதுகாப்பு வீதம் எவ்வளவாகும்? (2 புள்ளி)

இ. இறக்குமதிப் பொருள் மீதான வரி மாறா நிலையில் இறக்குமதி உள்ளீட்டின் மீது 5 சதவீத இறக்குமதி வரி விதிப்பின் மெய்ப்பயன் உறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதத்திற்கு என்ன நிகழும்?

(2 புள்ளி)

iii. உலக வர்த்தக அமையத்தின் $(WTO)$ பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக? (3 புள்ளி)

iv. ஒரு நாட்டின் சென்மதி நிலுவையொன்றினது குறுங்காலப் பற்றாக்குறை நிதிப்படுத்தல் நடவடிக்கைகளையும், நீண்டகாலப் பற்றாக்குறைகளுக்கான தீர்வுகளையும் தனித்தனியே பட்டியற்படுத்துக (4 புள்ளி)

v. வெளிநாட்டு அன்னிய செலாவணிச் சந்தையில் இலங்கையர்கள் டொலருக்கான கேள்வியை ஏற்படுத்தும் மூலங்கள் எவை? (4 புள்ளி)

**(9)**

i) பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை வேறுபடுத்துக? (4 புள்ளி)

ii) முழுவறுமை, சார்பு வறுமை என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக? (4 புள்ளி)

iii) பொருளாதார வளர்ச்சியொன்றின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விபரிக்குக? (4 புள்ளி)

iv) பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின் போது பொருளாதார வளர்ச்சியுடன் வேறு எவ்வகைப் பண்புரீதியான மாற்றங்கள் இடம்பெற வேண்டும்? (4 புள்ளி)

v) தனிநபர் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு உலகவங்கி உலக நாடுகளை எவ்வாறு வகைப்படுத்துகின்றது? (4 புள்ளி)

**(10)**

i) அறிவுசார் பொருளாதாரச் சுட்டெண்ணைத் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற நியமங்கள் எவை? (5 புள்ளி)

ii) வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சி திட்டங்கள் எவை? (5 புள்ளி)

iii) கீழ்க்கட்டமைப்பு வசதிகளின் பொருளாதார சமூக முக்கியத்துவத்தை விபரிக்குக? (5 புள்ளி)

iv) இலங்கையின் பிரதேச ரீதியான சமத்துவமின்மையினைப் போக்குவதற்கு முன்மொழியக்கூடிய நடவடிக்கைகள் எவை? (5 புள்ளி)